19

வாலாஜாபேட்டை நகராட்சி

2024ம் ஆண்டு ஜூன் 28ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரணகூட்ட நடவடிக்கைகள்

| மன்றகூட்டம் நடைபெற்ற நாள் | ஜூன்–2024ம் மாதம் வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் எண்.1**<br>நகராட்சி ஆணையாளர் அவர்களின் மார்ச்,ஏப்ரல்,மே–2024ம் மாதம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண். 512 மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28.06.2024 | **பொருள் எண்.2**<br>நகராட்சி பொறியாளர் அவர்களின் மார்ச்,ஏப்ரல்,மே –2024ம் மாதம் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண். 513 மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28.06.2024 | **பொருள் எண். 3**<br>வாலாஜாபேட்டை நகராட்சியில் 2023–2024 ஆண்டு Capital Grant Fund (CGF) திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான வன்னிவேடு தலைமை நீரேற்று நிலையத்தில் குடிநீர் மேம்பாட்டு பணிக்கு 14.03.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண். 514 மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| வ. எ ண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) | மதீப்பீடு விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. S. பாஸ்கரன்,<br>எண்.126, 4வது தெரு, அண்ணாநகர் மேற்கு,சென்னை–101 | ரூ.1084.00 | 0.05% (மதிப்பீடு விகிதத்தைவிட குறைவு) |
| 2. | M/s RKN Construction,<br>எண்.55, 2வது மெயின்ரோட், அண்ணாநகர் சென்னை–102 | | 3.42% (மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

<table>
<tr><td></td><td><u>அலுவலகக் குறிப்பு:-</u><br>1. மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு S. பாஸ்கரன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக (Less) கொடுத்துள்ளார். எனவே திரு S. பாஸ்கரன், ஒப்பததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளதை அங்கீகரித்து வேலை உத்தரவு வழங்கலாம்.<br>(ந.க.எண். 189/2024/இ1)</td><td></td></tr>
<tr><td>28.06.2024</td><td><u>பொருள் எண். 4</u><br>வாலாஜாபேட்டை நகராட்சியில் பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு நகராட்சிக்கு சொந்தமான வன்னிவேடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து ஆற்காடு தெத்து தெருவில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிற்கு குடிநீர் மின்மோட்டார் 50 Hp மூலம் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. தொடர் இயக்கத்தினால் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 50 Hp மின் மோட்டார் காயில் எரிந்து பழுதடைந்துள்ளதால் உடன் சரி செய்து இயக்கவும் மற்றும் ATS Panel Board மற்றும் மின் உதிரிபாகங்கள் பொருத்தவும் சரி செய்ய ஆகும் தயாரிக்கப்பட்ட தோராயா மதிப்பீடு தொகை ரூ.2.10 இலட்சம் ஆகும். பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு அவசரம் அவசியம் கருதி தற்போது பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருப்பதால் மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத சூழ்நிலை உள்ளதால் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998 பிரிவு 57(7)ன் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு. N.எழிலன் அவர்களின் மூலம் பணியை மேற்கொண்டதனை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்க்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு.</u><br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.780/2024/இ1)</td><td>நகரமன்ற தீர்மானம் எண். 515 மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் எண். 5**<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், வேலூர் அவர்களின் கடிதத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் வாலாஜாபேட்டை நகராட்சிக்குட்பட்ட குப்பை கொட்டும் இடத்தில் (Dumpsite) 2024-2025 ஆம் ஆண்டிற்கு Ambient Air Quality Survey செய்வதற்கு அனுப்பட்டுள்ள கேட்பு தொகை ரூ. 33,900/-ஐ செலுத்தியது மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 1917/2015/எச்1) | நகரமன்ற தீர்மானம் எண். 516<br>மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28.06.2024 | **பொருள் எண். 6**<br>வாலாஜாபேட்டை நகராட்சியில் வார்டு எண். 01 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் அமைந்த வாக்கு சாவடி மையங்களில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் ஏற்படுத்திட அரசு நிர்ணயித்துள்ள விலை விகிதத்தில் ரூ.62,500/-க்கு பணிகள் செய்ததை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.557/2024/இ1) | நகரமன்ற தீர்மானம் எண். 517<br>மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28.06.2024 | **பொருள் எண். 7**<br>வாலாஜாபேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் தூய்மை பணிக்கான விழிப்புணர்வு விளம்பர பேனர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் நகராட்சி மண்டல இயக்குநர் மற்றும் தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம், சுவட்ச்சுவர்வக்ஷன் GVP, 14420 செப்டிக் டேங்க்கிளினிங், திடக்கழிவு மேலாண்மை (மக்கும் குப்பை, மக்காத குப்பை) கிளின் டாய்லட், RRR Center, உலக பூமி தினம், உலக நீர் தினம், புகையில்லா போகி விழிப்புணர்வு, சத்தமில்லா தீபாவளி, பசுமையான தீபாவளி, வழிப்பாட்டு தலங்களை சுத்தம் செய்தல், உலக சுற்றுச்சுழல் தினம், உலக கழிப்பறை தினம், CT, PT தூய்மைத் திருவிழா (பூஜ்ஜிய கழிவுகள் குப்பைகளை தரம் பிரித்தல், மாபெரும் தூய்மைப் பணி முகாம், தூய்மை பணியாளர்களின், மேம்பாட்டு திட்டம், செல்பி பாய்ண்ட், என்நாடு என்மண் விளம்பர பேனர்களை தயார் செய்தமைக்கான செலவு தொகை ரூ. 20,800/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1. மன்றத்தின் முன் அனுமதி பெற்று தொகையினை வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. இச்செலவினத்தை பொதுநிதியில் வழங்கலாம்.<br>(ந.க.எண். 712 / 2022 / H1) | நகரமன்ற தீர்மானம் எண். 518<br>மன்றம் அனுமதிக்கப்பட்டது |

28.06.2024

**<u>பொருள் எண். 8</u>**

வாலாஜாபேட்டை நகராட்சியில் காந்திநகர் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–24 கீழ் புதிய அங்கன்வாடி கட்டிடம் கட்டுதல் அமைக்கும் பணிக்கு 25.03.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) | மதீப்பீடு விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. P. முருகன், நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.14.00 | 0.01% (மதிப்பீடு விகிதத்தைவிட குறைவு) |
| 2. | M/s ஸ்ரீ சாரதி பில்டர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர் | | 0.52% (மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு P. முருகன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக (Less) கொடுத்துள்ளார். எனவே திரு. P. முருகன், ஒப்பதாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.01% குறைவாக உள்ளதை அங்கீகரித்து வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண். 972/2023/இ1)

நகரமன்ற தீர்மானம் எண். 519
மன்றம் அனுமதிக்கப்பட்டது

28.06.2024

**<u>பொருள் எண். 9</u>**

வாலாஜாபேட்டை நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2023–24 கீழ் ஒத்தவாடை தெரு சார்பண சந்து பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 25.03.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement) மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

நகரமன்ற தீர்மானம் எண். 520
மன்றம் அனுமதிக்கப்பட்டது

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) | மதீப்பீடு விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. B. விஷ்ணு, நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.15.00 | 0.03% (மதிப்பீடு விகிதத்தைவிட குறைவு) |
| 2. | திரு. P. முருகன், நகராட்சி ஒப்பந்ததாரர் | | 0.54% (மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு B. விஷ்ணு, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.03% குறைவாக (Less) கொடுத்துள்ளார். எனவே திரு. B. விஷ்ணு, ஒப்பததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.03% குறைவாக உள்ளதை அங்கீகரித்து வேலை உத்தரவு வழங்கலாம்

.(ந.க.எண். 341 /2024/இ1)

| | | |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் எண். 10**<br>வாலாஜாபேட்டை நகராட்சியில் 15-வது நிதிக் குழு மான்யம் (15th FCHG) Finance Commission Health Grant (FY) 2023-24-ஆம் ஆண்டு நிதியின் கீழ் சார்பதிவாளர் அலுவலகம் பகுதியில் புதியதாக நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு 21.03.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண். 521 மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) | மதீப்பீடு விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. P. முருகன், நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.120.00 | 0.01% (மதிப்பீடு விகிதத்தைவிட குறைவு) |
| 2. | M/s ஸ்ரீ சாரதி பில்டர்ஸ், நகராட்சி ஒப்பந்ததாரர் | | 0.76% (மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு P. முருகன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக (Less) கொடுத்துள்ளார். எனவே திரு. P. முருகன், ஒப்பததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.01% குறைவாக உள்ளதை அங்கீகரித்து வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண். 782/2023/இ1)

28.06.2024

**பொருள் எண். 11**

வாலாஜாபேட்டை நகராட்சியில் SBM 2.0 17th SHPC 2023-2024ம் ஆண்டு திட்டத்தின் கீழ் புதியதாக சிறுநீர் கழிப்பறை கட்டிடம் அமைக்கும் பணிக்கு 14.06.2024 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டத்தில் இப்பணிக்கு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் (Comparative Statement) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) | மதீப்பீடு விகிதம் |
|---|---|---|---|
| 1. | திரு. B. விஷ்ணு, நகராட்சி ஒப்பந்ததாரர் | ரூ.1.28 | 0.07% (மதிப்பீடு விகிதத்தைவிட குறைவு) |
| 2. | திரு. P. முருகன், நகராட்சி ஒப்பந்ததாரர் | | 1.30% (மதிப்பீடு விகிதத்தை விட அதிகம்) |

**அலுவலகக் குறிப்பு:-**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு B. விஷ்ணு, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 0.03% குறைவாக (Less) கொடுத்துள்ளார். எனவே திரு. B. விஷ்ணு, ஒப்பததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.03% குறைவாக உள்ளதை அங்கீகரித்து வேலை உத்தரவு வழங்கலாம்.

(ந.க.எண். /2024/இ1)

நகரமன்ற தீர்மானம் எண். 522
மன்றம் அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் எண். 12**<br>இந்நகராட்சி சொந்தமான பாலார் வன்னிவேடு தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நகராட்சிக்குட்பட்ட பகுதிகள் முழுவதும் குடிநீரில் திரவ குளோரின் கலந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. 2024-2025ம் ஆண்டிற்கு திரவ குளோரின் சப்ளை செய்திட மதிப்பீட்டு தொகை ரூ 5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி வைக்கப்படுகின்றது.<br>**அலுவலகக்குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 2024-2025 ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து உரிய செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 947 /2024/இ1) | நகரமன்ற தீர்மானம் எண். 523 மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28.06.2024 | **பொருள் எண். 13**<br>வாலாஜாபேட்டை நகராட்சியில் பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு நகராட்சிக்கு சொந்தமான வன்னிவேடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து நகர் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிற்கு தினமும் குடிநீர் வழங்கும் நீர் உறிஞ்சு கிணறுகளில் கிணறு எண் 1 மற்றும் 5 ல் 7.5 HP மின்மோட்டார்கள் மின் அழுத்தம் காரணமாக பழுது ஏற்பட்டு இயக்க முடியாமல் உள்ளது எனவே பழுது நீக்கவும் மின்மோட்டார் (Standby Motor) 7.5 HP மற்றும் சோளிங்கர் ரோடு Sump ,(Standby Motor ) 20 HP Rewinding செய்து இருப்பு வைத்து கொள்ளவும் தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீடு தொகை ரூ. 1.30 இலட்சம் ஆகும் மன்றத்தின் அனுமதிக்கு பார்வைக்குவைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. 2024-2025 ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் சேர்த்து குடிநீர் நிதியிலிருந்து உரிய செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 946 /2024/இ1) | நகரமன்ற தீர்மானம் எண். 524 மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28.06.2024 | **பொருள் எண். 14**<br>இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு 2024-2025ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், A4 பேப்பர், டோனர்கள் மற்றும் இதர அலுவலக உபயோக பொருட்கள் வாங்குவதற்கு அரசு அங்கிகாரம் பெற்ற திருவண்ணாமலை அச்சக எழுது பொருள்கூட்டுறவு அச்சக சங்கத்திடம் வாங்குவதற்கு தேவையான தோராய செலவு ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகரமன்ற தீர்மானம் எண். 525 மன்றம் அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை 2024-2025ம் ஆண்டுக்கான பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், அவசர அவசியம் கருதி நகர மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1629/2019/பி3)</td><td></td></tr>
<tr><td>28.06.2024</td><td><u>பொருள் எண். 15</u><br>இவ்வலுவலக உபயோகத்திற்காக தினமும் தினகரன் மற்றும் தினதந்தி தினசரி நாளிழ்கள் வாங்கப்படுகின்றன. மேற்கண்ட நாளிதழ்கள் இவ்வலுவலகத்திற்கு 01.01.2024 முதல் 31.12.2024 வரை இரண்டு நாளிதழ்களை சப்ளை செய்ய ஒரு வருடத்திற்கான சந்தா தொகை ரூ.5,760/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. 2023-24-ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்து பொதுநிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. நாளிதழ் அங்கீகாரம் பெற்ற கே.முருகன், தினசரி நாளிதழ் ஏஜெண்ட், வாலாஜாபேட்டை அவர்களுக்கு மேற்கண்ட தொகையினை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 1616/2010/இ1</td><td>நகரமன்ற தீர்மானம் எண். 526<br>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>28.06.2024</td><td><u>பொருள் எண். 16</u><br>வாலாஜாபேட்டை நகராட்சியில் நடைபெறும் பணிகளுக்காக ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் GST, வருமானவரி (Income Tax) தொகையினை மத்திய அரசுக்கு மாதம் தோறும் செலுத்தி தனியார் (Private consultancy) மூலம் தாக்கல் செய்ய அதற்கான தோராய செலவினம் ரூ.1.50 இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக் குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. நிதியாண்டு 2024-2025ம் ஆண்டு பொதுநிதிலிருந்து செலவினம் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.685/2024/பி2</td><td>நகரமன்ற தீர்மானம் எண். 527<br>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 28.06.2024 | **பொருள் எண். 17**<br>வாலாஜாபேட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 1 முதல் 24 வார்டுகளில் கொசுக்களால் பரவக் கூடிய டெங்கு காய்ச்சல், மலேரியா போன்ற நோய்களை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள், மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க "கயல் மகளில் சுய உதவி குழு" மூலம் 16 DBC பணியாளர்கள் கடந்த 01.04.2024 ஏப்ரல் மாதம் பணியினை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் தற்போது பருவமழை தொடங்கி உள்ள இந்நிலையில் இம்மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவாமல் இருக்க வாலாஜாபேட்டை நகராட்சி பகுதிகளில் போர்கால அடிப்படையில், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துணை சுகாதார இயக்குநர் இராணிப்பேட்டை அவர்களின் அறியுறுத்தலின் படியும் கொசுப் புழு ஒழிப்பு பணியினை மேற்க்கொள்ள மேற்கண்ட "கயல் சுய உதவி குழு" மூலம் 16 DBC பணியாளர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுவந்து நாள் ஒன்றுக்கு தினக்கூலி ரூ. 329/- வீதம் 01.07.2024 முதல் 30.09.2024 தேதி வரை மேலும் மூன்று மாதங்கள் 92 நாட்களுக்கு பணியினை தொடர்ந்து மேற்கொள்ள அதற்கான செலவு தொகை ரூ.4,84,288/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தொடர்ந்து இப்பணியின் மேற்கொள்ளப்பட்டு வருவதால் பணியின் அவசரம் அவசியம் கருதி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.939/2023/எச்1) | நகரமன்ற தீர்மானம் எண். 528 மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 28.06.2024 | **பொருள் எண். 18**<br>இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை செம்மையாக செயல்படுத்த வேண்டியும், மக்கும் குப்பை மக்காத குப்பைகள் என தரம் பிரித்து வழங்க வேண்டியும், கால்வாய் மண்களை அப்புறப்படுத்திடும் பணிகள் மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதல் விலை விகிதபடி வெளிக்கொணர்வு முகமை மூலம் M/s. Ice Power Private Private Limited. Ranipet., என்ற நிறுவனத்திற்க்கு உத்திரவு வழங்கி பணிநடைபெற்று வருகின்றது. மேற்கண்ட நிறுவனத்திற்க்கு வழங்கப்பட்ட பணிகாலம் 14.06.2024 தேதியன்று முடிவடைகிறது.<br>M/s. Ice Power Private Private Limited. Ranipet என்ற நிறுவனத்தின் 14.06.2024ந் தேதிய கடிதத்தில் மேற்படி பொதுசுகாதார பணியினை ஏற்கனவே வழங்கப்பட்ட ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் 15.06.2024 முதல் 14.06.2025 வரை ஓராண்டு காலத்திற்கு பணி புதுப்பித்து வழங்க கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே ஏற்கனவே மேற்படி பணியை செய்து வரும் M/s. Ice Power Private Private | நகரமன்ற தீர்மானம் எண். 529 15.06.2024 முதல் 14.09.2024 வரை மூன்று மாதங்களுக்கு மட்டும் நீட்டித்து கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | Limited. Ranipet என்ற நிறுவனத்திற்க்கு 15.06.2024 முதல் 14.06.2025 வரை மேலும் ஓராண்டுக்கு நீடித்துக்கொள்ளவும் அதற்காகும் தோராய செலவினம் ரூ.208.48 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்<br>3. 2024–2025ம் ஆண்டுக்கான திட்டமதிப்பீட்டில் மேற்படி செலவினத்தை சேர்த்து பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1238/2018/ எச்1) | |

(ஓம்) ஹரிணி தில்லை,
நகரமன்ற தலைவர்,
வாலாஜாபேட்டை நகரமன்றம்.

// உண்மை நகல் //

ஆணையாளர் (மு.கூ.பொ),
வாலாஜாபேட்டை நகராட்சி.